பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 219

வெள்ளிக்கிழமை
04 ஜூலை 2025

ஆனி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

தடுப்புக்காவல்

## 5 ஆண்டுகளில் 49 மரணங்கள்!

விரிவு பக்:- 05

# பயங்கரவாதத் தடைச்சட்டம் செப்ரெம்பர் மாதம் நீக்கம்!

நீதியமைச்சர் உறுதி



**கொழும்பு, ஜூலை 4**

**பயங்கரவாதத் தடைச்சட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம்முதல் முழுமையாக நீக்கப்படும் என்று நீதியமைச்சரான ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

11



## சிறுவர்களின் 2 என்புத்தொகுதிகள் செம்மணியில் நேற்று அடையாளம்

இதுவரை 40 என்புத்தொகுதிகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கையின்போது சிறுவர்களின் என்புத் தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் இரு சிதிலங்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் எட்டாம் நாள் நடவடிக்கைகள் நேற்று

11

## மூத்த ஊடகவியலாளர் கிருஸ்ணகுமார் மறைவு



கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சியைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் நடராசா கிருஷ்ணகுமார் (வயது - 52) சுகவீனம் காரணமாக நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

மூத்த ஊடகவியலாளர் நடராசா கிருஷ்ணகுமார் கடந்த 1999ஆம் ஆண்டுமுதல் 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வரையும் புலிகளின் குரல் வானொலி, தமிழீழ வானொலி ஆகியவற்

11

## மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் பாதுகாப்பாக யாழ்.பல்கலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 4

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை அகழ்ந்து எடுக்கப்பட்ட 34 என்புத் தொகுதிகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட பாடசாலைப் புத்தகப்பை, பொம்மை, காலணி, சிறு வளையல் போன்ற பொருள்கள் நீதிமன்ற கட்டுக்காவலிலும் சான்றுப் பொருள்களாகப் பேணப்பட்டு வருகின்றன என சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் தெரிவித்தார்.

செம்மணி புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் நேற்றையதினம்

11

வவுனியாவில்

## 25,000 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை

திலகநாதன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 4

வவுனியாவில் 'கூகுள் வரைபடம் மூலம்' வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட 25 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளை முன்னெடுத்துள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்

11

போதைக்கு அடிமையான ஐவருக்கு புனர்வாழ்வகம்

விரிவு பக்:- 11

செம்மணிப் புதைகுழி

## அகழ்வு விரிவாக்கப்பட்ட பகுதியில் சான்றுப் பொருள் நேற்று அவதானம்!



யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் - செம்மணியில் அகழ்வுப் பணிகள் விரிவாக்கப்பட்ட பகுதியில் இருந்து ஆடையை ஒத்த சான்றுப்பொருளொன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற பகுதிக்கு மேலதிகமாக, பிறிதொரு இடமும் மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்று துறைசார் பேராசிரியர் ராஜ்சோமதேவ

11

கரைச்சி சபையின் தவிசாளர்

## வேழமாலிகிதனை நீக்க தமிழரசுக் கட்சி திட்டம்

விளக்கம்கோரிக் கடிதம்

கிளிநொச்சி, ஜூலை 4

தமிழரசுக் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிய குற்றச்சாட்டில், கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை தவிசாளர் அ.வேழமாலிகிதனை கட்சியில் இருந்து நீக்குவதற்கு பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் உள்ளதாவது:-

கடந்த ஜூன் மாதம் 19ஆம் திகதியன்று, தாங்களும் இன்னும் மூவரும் வடக்கு

11



'குத்குத்ப்பைக்காரன் மாதிரி நீக்கிறம் நீக்கிறம் எண்டு சொல்லிக்கொண்டிராமல் செயலில காட்டுங்கோ பாப்பம்'

## காரைநகரில் விபத்து: இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

காரைநகர் பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞரொருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

காரைநகர் - களபூமி பகுதியைச் சேர்ந்த சங்கரப்

11

## மீன்பிடிக்கச் சென்றவர் மயங்கி வீழ்ந்து பலி!

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் தூண்டில் மூலம் மீன்பிடிக்கச் சென்ற குடும்பத்தலைவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

வேலாயுதம் ஜெயரூபன் என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு

11

அளவுக்கதிக போதைப்பாவனை

## நெஞ்சுவலி ஏற்பட்டு இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4


யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்த இளைஞர் திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 03.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4121 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 17 26 32 66 |
| விசேட எழுத்து | T |

| ஹந்தஹஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 03.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1188 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 07 10 39 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 03.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0147 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 2 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 03.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2227 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 14 16 47 62 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 03.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5879 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 4 3 0 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 03.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1909 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 26 65 67 82 |
| விசேட எழுத்து | L |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 03.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0454 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 4 3 0 8 |

# அத்துமீறும் இந்திய மீனவர்கள் நிச்சயம் கைதுசெய்யப்படுவர்

## கடற்றொழில் அமைச்சர் திட்டவட்டம்

**கொழும்பு, ஜூலை 4**

**இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறினால் கைதுசெய்யப்படுவார்கள், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படும். இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமில்லை என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறல் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துக்குப் பாதகமாக மாறியுள்ளது. இதுதொடர்பாக இந்தியத் தரப்புக்கும் தெரிவித்திருந்தோம். கடந்த மூன்று மாதங்களாக இந்திய மீனவர்களின் பிரச்சினை இருக்கவில்லை. தற்போது மீண்டும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைய ஆரம்பித்துள்ளனர். அவர்களை நாம் கைதுசெய்துள்ளோம்.

இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் மயிலிட்டித் துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

அவை அரசுடமையாக்கப்பட்டுள்ளன. தமிழக மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறுவதை நிறுத்தவேண்டும். அவ்வாறு இல்லையேல் கைதுகள் தொடரும். படகுகள் பறிமுதல் செய்யப்படும். உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர் பிரச்சினை தொடர்பில் இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கையிலும் இறங்கியுள்ளோம். கடற்படைக்குக் கூடுதல் வளங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தடுத்துநிறுத்தப்படும் - என்றார். (எ-26)



# ஓமானில் சிக்கினார் 'மிதிகம சூட்டி'

கொழும்பு, ஜூலை 4

வெளிநாட்டில் தலைமறைவாகியிருந்த திட்டமிட்ட குற்றங்களுடன் தொடர்புடைய, போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய மிதிகம சூட்டி என்று அழைக்கப்படும் நபர் ஓமானில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச பொலிஸாரால் சிவப்பு அறிவிப்பு பிறப்பிக்கப்பட்ட இந்த நபரை ஓமான் பாதுகாப்புப் படையினர் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதாள உலகத் தலைவர்களான நதுன் சிந்தக அல்லது ஹரக்கட்டா மற்றும் மிடிகம ருவான் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டவர் என்று கூறப்படும் மிதிகம சூட்டி, டுபாயில் மறைந்திருந்து, பின்னர் ஓமானுக்குத் தப்பிச் சென்றார் என்று கூறப்படுகிறது.

இந்த நபர் தனது உதவியாளர்களைப் பயன்படுத்தி தென் மாகாணத்தில் கொலைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலைச் செய்துள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-இ)

# விலைச்சூத்திரத்துக்கு ஏற்பவே விலைகளின் ஏற்ற, இறக்கங்கள்

## அமைச்சரவைப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஜூலை 4

விலைச் சூத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன. விலைகளில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்போது அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒவ்வொரு மாத இறுதியிலும் அடுத்த மாதத்துக்கான எரிபொருள் விலை சூத்திரத்துக்கமையக் கணிப்பிடப்படும். ஜூலை மாத எரிபொருள் விலைக்காக ஜூன் 30ஆம் திகதி கணிப்பீடு இடம்பெற்றது. ஜூன் மாதத்தில் காணப்படும் எரிபொருள் விலையை அடிப்படையாகக் கொண்டே ஜூலை மாதத்துக்கான விலையும் தீர்மானிக்கப்படும்.

மாறாக ஏப்ரல் அல்லது மே மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் விலையை அடிப்படையாகக்கொண்டு ஜூலை மாதத்துக்கான விலை தீர்மானிக்கப்படுவதில்லை.

ஜூன் மாதம் சராசரி விலை அதிகரித்தமையால் ஜூலை மாதத்திலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜூலைமாதம் சராசரி விலை குறையும்பட்சத்தில், ஓகஸ்ட் மாதம் விலை குறைவடையும். கடந்த காலங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்காவிட்டால் தற்போது மக்களுக்கு எரிபொருள் விலைகளில் நிவாரணங்கள் வழங்கியிருக்கமுடியும் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 03.07.2025 | வியாழக்கிழமை | 0587 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| E | 6 5 4 2 5 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.07.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2853 | G | 03 17 48 67 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.07.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 07 32 38 75 | 5014 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 03.07.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0717 | 12 33 40 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.07.2025 | வியாழக்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 19 39 49 60 | 4565 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 03.07.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 35 | 54 57 64 69 | 2029 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 03.07.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 06 07 43 75 | 2679 |

# எயார்லைன்ஸ் மோசடி; விசாரிப்பதற்குக் குழு

கொழும்பு, ஜூலை 4

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவன மற்றும் விமானசேவைகள் தனியார் லிமிடெட் நிறுவனங்களில் 2010ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டுக்கிடையில் நடந்ததாகக் கூறப்படும் மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்யக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தலைமையிலான இந்த விசேட விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார். (ச-இ)

# எரிபொருள் விலை உயர்வு; மக்களுக்கான அநீதி

## ஹெக்டர் அப்புஹாமி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

எரிபொருள்களின் விலைகளை அரசாங்கம் திடீரென அதிகரித்து மக்களுக்குப் பெரும் அநீதியை இழைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளது. ஆனால் மக்கள் தோல்வியடைந்துள்ளனர். இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்து மக்கள் ஏமாந்துள்ளனர். நியாயமான காரணங்கள் இன்றி அரசாங்கம் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளது. இது நம்பி வாக்களித்த மக்களுக்குச் செய்யும் அநீதியாகும். எரிபொருள்களின் விலைகளை அதிகரித்தால் படிப்படியாக அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும். ஏற்கனவே வாழ்க்கைச் செலவினத்தைச் சுமக்கமுடியாதுள்ள மக்களுக்கு இது பெரும் சுமையாக இருக்கும்- என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அமெரிக்க வரி தொடர்பில் சாதக முடிவு கிடைக்கும்

## அரசாங்கம் நம்பிக்கை

**கொழும்பு, ஜூலை 4**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வழங்கிய கால அவகாசம் எதிர்வரும் 9ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. அதற்கு முன்னர் இலங்கைக்கு சலுகை கிடைக்கக்கூடியவாறு அவரால் அறிவிக்கப்பட்ட வரிக் கொள்கைகளில் திருத்தங்களை ஏற்படுத்தமுடியும் என நம்புகின்றோம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்த வரிக் கொள்கையால் இலங்கை மட்டுமன்றி முழு உலகமும் திகைப்படைந்தது. இதுதொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு 90 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்வதற்காக நிதி அமைச்சின் தலைமையீட்டுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் 9ஆம் திகதியுடன் அந்தக் கால அவகாசம் நிறைவடைகிறது.

அதற்கு முன்னர் இலங்கை நிவாரணமொன்று கிடைக்கக்கூடிய நிலைமையை அடைய முடியும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஏ-இ)

## அஸ்வெசும இரண்டாம்கட்டப் பெயர்ப்பட்டியல் வெளியீடு

கொழும்பு, ஜூலை 4

அஸ்வெசும இரண்டாம் கட்டத்தின் கீழ், கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடையவர்களின் பட்டியலை நலன்புரி நன்மைகள் சபை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியல் நலன்புரி நன்மைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.wbb.gov.lk இல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடையவர்களின் பட்டியல் அனைத்துப் பிரதேச செயலக அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளிலும், கிராம உத்தியோகத்தர் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளின் காரியாலய அறிவிப்புப் பலகைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

## மின்கம்பத்துக்கு அருகாக உயர்மின் அழுத்தவடம்!

### உயிராபத்துகளைத் தடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

வீதி மின்விளக்குக் கம்பத்துக்கு மிக அருகாக உயர்மின் அழுத்த மின்வடம் செல்வதனால் உயிராபத்துகள் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது. இதுதொடர்பில் மின்சாரசபையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மஞ்சவனபதி முருகன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வீதி மின்விளக்குக் கம்பத்தின் மிக அருகாக உயர்மின் அழுத்த மின்வடம் செல்கின்றது. காற்றுக் காரணமாக மின்விளக்குக் கம்பத்தில் மின்வடம் தொடுகையிடுமாயின் ஆபத்துகள் ஏற்படலாம்.

குறித்த மின்விளக்குக் கம்பத்தில் பழுதடைந்த மின்விளக்கைத் திருத்த முற்பட்ட நல்லூர்ப் பிரதேசசபை ஊழியர் உயர்மின் அழுத்த மின்வடத்தில் இருந்து பாய்ந்த மின்சாரம் காரணமாகவே மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானார், இடுப்புப் பட்டி அணிந்து, பாதுகாப்பாக பணியில் ஈடுபட்டு இருந்தமையால் உயிராபத்து தவிர்க்கப்பட்டுள் ளது.

எனவே குறித்த மின்விளக்குக் கம்பம் தொடர்பில் மின்சாரசபையினர் கவனம்செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-26)



## கந்தானையில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 4

கந்தானையில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தானைப் பொதுச்சந்தைக்கு அருகில், காரில் இருந்த இருவரை இலக்குவைத்து குறித்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையிலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த மற்றைய நபர் மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பிரத்தியேக செயலாளராகப் பணியாற்றியவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சங்கிலி வழிப்பறி; பறிபோனது உயிர்

கொழும்பு, ஜூலை 4

இரத்தினபுரியில் குருவிட்டப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெவிபஹல தொடன்எல்ல வீதியில் இனந்தெரியாத நபரொருவர் யுவதி ஒருவரின் கழுத்தை அறுத்து அவரது கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது.

காயமடைந்த யுவதி இரத்தினபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார்.

தப்பிச்சென்ற சந்தேகநபரைக் கைது செய்ய மேலதிக விசாரணைகளை [illegible] வருகின்றனர். (ச-இ)

## வயித்தில வார்த்தது பாலா? நெருப்பா?

ஒரு குட்டிக்கதை. ஒரு சிறைச்சாலையை சுத்திப்பாக்க மேலதிகாரி ஒருத்தர் வந்திருக்கிறார், அதில மூண்டு சிறைக்கூண்டின்ர கதவுகள் மட்டும் திறந்தபடி இருந்திருக்குது. "ஏனிப்பிடி திறந்துவைச்சிருக்கிறியள். அதுக்க இருக்கிறவங்கள் ஓடினால் ஆர் பதில் சொல்லுறது?" எண்டு மேலதிகாரி கத்தியிருக்கிறார். அதுக்கு அந்தச் சிறைக்குப் பொறுப்பானவர் "அந்தமூண்டுகூண்டிலையும்இருக்கிறவையின்ர கதவைப் பூட்டினாலும் ஒண்டுதான், பூட்டாட்டியும் ஒண்டுதான்" எண்டிட்டு ஒவ்வொரு சிறைக்கூண்டிலையும் இருக்கிறவையைப் பற்றி விளங்கப்படுத்தத் தொடங்கிட்டார். "முதலாவது கூண்டில இருக்கிற கைதியள் ஜப்பான்காரர். அவங்களை எங்க அடைச்சாலும் ஏதோ ஒரு ரெக்னிக்கலைப் பாவிச்சு வெளியால வந்திடுவாங்கள். அதாலதான் அவங்கட கதவைப் பூட்டேலை. ரண்டாவது கூண்டில இருக்கிறவங்கள் பிரிட்டிஷ்காரரங்கள். அவங்கள் வெளியில போகாதையெண்டு ஓர்டர் போட்டிட்டு, நாங்களே கழுத்தைப் பிடிச்சுத்தள்ளினாலும் போகமாட்டாங்கள். அதால அவங்கட கதவையும் பூட்டத் தேவையில்லை" எண்டு சிறையதிகாரி சொல்ல, "அப்ப மூண்டாவதில இருக்கிறவை..?" எண்டு மேலதிகாரி கேட்டார். "அதில இருக்கிறது தமிழ்க்கைதியள். அவங்களில ஆரும் ஒருத்தன் தப்ப வெளிக்கிட்டாலும் மற்றவன் காலைப் பிடிச்சு இழுத்து விழுத்திடுவான் இல்லாட்டி எங்களுக்குக் காட்டிக் குடுத்துடுவான். அதால அவங்களும் கதவைத் திறந்துவிட்டாலும் தப்பமாட்டாங்கள்" எண்டு சிறையதிகாரி சொன்னாராம். அப்பிடி குழிபறிக்கிறதையே குலத்தொழிலா வைச்சிருக்கிற இனம் நாங்கள் மட்டும்தான். ஆர் நல்லது செய்தாலும், முன்னேற வெளிக்கிட்டாலும் அதைக் குழப்பிறதுதான் எங்கட முதல்வேலையா இருக்கும்.

முந்தின காலத்தில எங்கையாவது ஒண்டிரண்டு பேருக்குத்தான் குழந்தைப்பேறு இல்லாமல் இருக்கும். ஆனால் இப்ப கனபேருக்குக் குழந்தை இல்லாமல், 'ஐ.வி.எப்' எண்ட செயற்கைமுறையில கருத்தரிக்கிற சிகிச்சை செய்யினம். வடக்கில நாலைஞ்சு இடங்களிலதான் இப்பிடி 'ஐ.வி.எப்' செய்யினம். பிரைவேட் ஆஸ்பத்திரியளில 'ஐ.வி.எப்' செய்யிறதெண்டால், கிட்டத்தட்ட 45 லட்சம் ரூபாவுக்கு கிட்டத்தேவை. ஒரு பிள்ளைக்குச் சீதனம் குடுக்கிற தொகை. அதால காசுள்ளவைதான் இந்த ட்ரீட்மெண்டுக்குப் போகக்கூடியதா இருக்குது. மிச்சப்பேர் "எங்களுக்கு குழந்தை கிடைக்காதோ? காசுதான் இல்லையெண்டால் குழந்தையும் இல்லையே" எண்டு தாங்களுக்குள்ளேயே குமைஞ்சுகொண்டிருக்கினம்.

இப்பிடிப்பட்ட நிலையிலதான் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில கொஞ்சநாளைக்குமுதல் 'ஐ.வி.எப்' செய்யிற யுனிட் இயங்கத் தொடங்கியிருக்குது. நல்ல பேமஸான டொக்டர்மார்தான் இஞ்சையும் 'ஐ.வி.எப்' செய்யினம். ஆனால் வெறும் நாலரை லட்சத்தோட 'ஐ.வி.எப்' செய்யலாமாம். வெளியால செய்யிறதைவிட பத்துமடங்கு செலவு குறைவு. இது காசில்லாதவையின்ர வயித்தில பாலைவார்க்க, வெளியால 'ஐ.வி.எப்' செய்து காசுழைச்சு ருசிகண்ட பிரவேட் ஆஸ்பத்திரிக்காரரின்ர வயித்தில நெருப்பைக் கொட்டியிருக்குது. அதால அவையள் எப்பிடி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில இயங்கத் தொடங்கியிருக்கிற 'ஐ.வி.எப்' யுனிற்றை குழப்பியடிக்கலாம் எண்டு மண்ணெண்ணெய்பட்ட சாரைப்பாம்புபோல ஓடித்திரியினமாம். ஒரு நல்லது நடக்க விடமாட்டினமே. இவையிட்ட இருந்து 'ஐ.வி.எப்' யுனிட்டைக் காப்பாத்துறது, கம்சனிட்ட இருந்து கண்ணனைக் காப்பாத்தினதை விடக் கஷ்டமாத்தான் இருக்கப்போகுது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆதாயமும் தருவதாக இருக்கும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குடும்பத்தினருடன் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேச்சில் பொறுமை அவசியம்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன்வாங்கவும்நேரிடும். தாய்வழி உறவினர்கள் கேட்கும் உதவியைச் செய்துகொடுப்பீர்கள். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**சிம்மம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் தாமதமாகமுடியும். சிலருக்கு வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அலுவலகப்பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளநேரிடும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப்பயணம் செல்லநேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு மகான்களின் தரிசனமும், அவர்களின் ஆசிகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் ஏற்படும்.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும் போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் நீங்கள் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** வீண்செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்து விடுவது நல்லது. வெளியிடங்களில் உணவு உண்பதைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்கு திடீர்ச்செலவுகளால் கடன்வாங்கவும் நேரிடும். சகோதரர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். நீண்டநாள் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் ஏழாம் நாள் மாலைத் திருவிழாவான கைலாசவாகனத் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ச-66)

## நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், ஜுலை 4

கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தெரிவு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் தலைவராக சு.குமரகுரு, செயலாளராக சி.கிருஷாந்த், பொருளாளராக பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கலாநிதி வை.ஜெகதாஸ், உபதலைவராக ஆசிரியர் ச.முகுந்தன், உபசெயலாளராக க.மதன்ராஜ், கணக்காய்வாளராக இலங்கை முதல் உதவிச் சங்க ஆணையாளர் கலாநிதி வை.மோகனதாஸ், உறுப்பினர்களாக சு.திருஞானசோதி, அ.நடேசன், த.தினேஸ், க.பகிரதன், க.நந்தகோகுலன், க.ராகுலன், ம.லிகிர்தன், செ.திலக்சன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். நிகழ்வில் கிராம அலுவலர் ரி.வாகினி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.கமலதாசன், சாவகச்சேரிப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான தி.சுதாகினி, பி.சிவமதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-159)

## விருதுகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 4

யாழ்.மாவட்ட பண்பாட்டுப் பேரவையால் இந்த வருடத்துக்குரிய யாழ் முத்து மற்றும் இளங்கலைஞர் ஆகிய விருதுகளுக்குத் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலைத்துறையில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கும் 50வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் யாழ் முத்து விருதுக்கும் 40 வயதுக்குட்பட்ட கலைஞர்கள் இளங்கலைஞர் விருதுக்கும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பப் படிவத்தினை அந்தந்தப் பிரதேச செயலக அல்லது மாவட்டச் செயலக கலாசார அலகில் பெற்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பங்களைக் பிரிவுக் கிராம அலுவலர், பிரதேச கலாசார அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-9)



யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபையால் 103 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கயிறு இழுத்தல் போட்டி அண்மையில் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டது. இப்போட்டியில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் கலந்துகொண்டனர். இறுதிப் போட்டியில் யாழ்.ப.நோ.கூ.மகளிர் அணியும் மூளாய் கூட்டுறவு மருத்துவமனை மகளிர் அணியும் மோதியதில் யாழ்.ப.நோ.கூ.மகளிர் அணி வெற்றி பெற்றது. (ச-41-17)

## திறப்புவிழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜுலை 4

தம்பிஐயா கலாமணி அரங்கத்திறப்பு விழாவும், பா. இரகுவரனின் "காத்தவராயன் வழிபாடு காத்தவராயன் நாடகம்" எனும் நூல் வெளியீடும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.வடமராட்சி அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் ஆலயத்தின் தம்பிஐயா கலாமணி அரங்கில் இடம்பெற்றது. ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியர் க.பரணீதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தம்பிஐயா கலாமணி அரங்கை மறைந்த கலாமணியின் பாரியார் திறந்துவைத்தார். நூலை அதன் ஆசிரியர் பா.இரகுவரன் வெளியிட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் க.திலகநாதன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் காத்தவராயன் சிந்துநடைக்கூத்து அரங்கேற்றப்பட்டது. (ச-41-66)





சாவகச்சேரி மண்டுவில் இலஞ்சிராணியம் அம்பாள் (சோலையம்மன்) கோவில் பெருந்திருவிழாவின் கொடியேற்றம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. எதிர்வரும் 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பார்க்க கண்களை கொடுத்த ஆண்டவன் பாராதிருக்க இமைகளையும் கொடுத்திருக்கிறான். இரண்டையும் சரியான சமயத்தில் பயன்படுத்துபவன் புத்திசாலி.

—எமெர்சன்—


# உருப்படியாகச் செய்தது என்ன?

'உள்ளகப் பொறிமுறை வலுப்படுத்தப்பட்டு பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன' என்று கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத். கடந்த கால அரசாங்கங்களின் வழியில், பழைய பல்லவியைப் பாடியுள்ள வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத், தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் இறுதிப்போரில் நடந்த போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங் கள், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை ஆகியவற்றில் எவ்வாறான முன்னெடுப்புகளைச் செய்துள்ளது என்பவற்றை வெளிப்படுத்தத் தவறியுள்ளார்.

தமிழ்மக்களின் உரிமைக்கான விடுதலைப்போர் கொடூரமானமுறையில் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டபோது, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இறுதிப்போரில் கொல்லப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர். இறுதிப்போரில் போர்க் குற்றங்கள் நடந்தமைக்கான 'மனிதகுலத்துக்கு ஒவ்வாத குற்றங் கள் நிகழ்த்தப்பட்டமைக்கான வலுவான ஆதாரங்கள் வெளிப்பட்டிருந்தாலும், கடந்த காலங்களில் ஆட்சி யிலிருந்த அரசாங்கங்கள் அவற்றுக்குக் காரண மானவர்களைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தத் தவறின. மாறாக அந்தக் குற்றங்களுடன் தொடர்புடை யவர்கள் என்று கருதப்படுபவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு உயர்பதவிகளைக் கொடுத்து அழகு பார்த்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அமைப்புகளும், நாடுகளும் இறுதிப் போரிலும், அதற்கு முன்னரும் நடந்த குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையை வலியுறுத்துகையில், இலங்கை ஆட்சியாளர்கள் வார்த்தை ஜாலங்களாலும், கண்துடைப்பு நடவடிக்கைகளாலும் அவற்றைத் தட்டிக்கழித்தனரேதவிர பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கைகொள்ளும்வகையில் சிறு துரும்பையேனும் நகர்த்தவில்லை. சர்வதேச தலையீட்டுடனான விசா ரணைப் பொறிமுறையை நிராகரித்து, உள்ளகப் பொறிமுறைமூலமே பொறுப்புக்கூறல்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சாதித்துவந்த ஆட்சியா ளர்கள், பொறுப்புக்கூறல் தொடர்பாக காத்திரமான எதையும் செய்யவில்லை. இலங்கை ஆட்சியாளர்களின் இந்தப் போக்கு, குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்ற நம்பிக்கையை தமிழ் மக்களின் மனங்களில் இல்லாது செய்தன. தமிழ் மக்கள் சர்வதேச தலையீட்டைக் கோருவதற்கும் இதுவே காரணமாக விருக்கின்றது.

தற்போதைய அரசாங்கமும் தமிழர் விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்களின் வழியிலேயே செல்ல முயல்கின்றது என்றே தெரிகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள அமர்வில் இலங்கை விவகாரமும் பேசப்படவுள்ளநிலையில், அதிலிருந்து தப்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்க வில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்குவந்து பல மாதங்கள் கடந்துள்ளபோதும் பொறுப்புக்கூறல் பொறிமுறை தொடர்பாக எவ்விதமான நடவடிக்கை களையும் முன்னெடுக்கவில்லை. மாறாக இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்பதை அரசாங் கத்தின் முக்கியஸ்தர்கள் வெளிப்படுத்தியும் இருக்கின் றனர். அவ்வாறிருக்கையில், உள்ளகப் பொறிமுறை வலுப்படுத்தப்பட்டு பொறுப்புக்கூறல்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றால், எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் வெளிப்படுத்தவேண்டும். அதற்கு முதலில் ஏதாவது உருப்படியாக, உலகம் நம்பும்படி ஏதாவது செய்யவேண்டும். இந்த அரசாங்கம் அப்படி எதைத் தான் செய்திருக்கிறது? இதுதான் இப்போது எல்லோர் மனதிலும் உள்ள மில்லியன் டொலர் கேள்வி.



# உயர்தர தேர்ச்சிக்கு அமைய வெளிநாட்டில் பட்டப்படிப்பு!

## நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம்

கொழும்பு, ஜூலை 4

**கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் உயர்வான தேர்ச்சியைப் பெறுகின்ற மாணவர்கள் தமது முதலாவது பட்டப்படிப்பை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொடர் வதற்கான வாய்ப்புகளை வழங்கும் புலமைப்பரிசில் வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

சர்வதேசத்தரப்படுத்தல் குறிகாட்டி களில் முதல் 500 இடங்களைப் பிடித்துள்ள, ஆங்கிலமொழியில் கற்பித்தல்களை மேற்கொள்கின்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்க ளில் 4 ஆண்டுகள் பட்டப்படிப்புக ளைப் பூர்த்திசெய்வதற்குப் புல மைப்பரிசில்களை வழங்குவதற்கு இந்தத் திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட் டுள்ளது. முதற்கட்டமாக 2025 ஆம் ஆண்டுக்காக 20 தொடக்கம் 50 மாணவர்களைத் தெரிவுசெய்வ தற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உயர்தரப் பரீட்சையில் பிரதான பாடத்துறைகளின்கீழ் உயர்வான இசட்புள்ளிகளைப்பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு விண்ணப்பிப் பதற்கு வாய்ப்பு வழங்கப்படவுள் ளது. விண்ணப்பங்களில் பொருத் தமான மாணவர்களைத் தெரிவு செய்வது பல்கலைக்கழகப் பேராசிரி யர்கள் மற்றும் விரிவுரையாளர்களு டன் கூடிய நேர்முகத் தேர்வுக்குழு வொன்றின்மூலம் மேற்கொள்ளப்ப டவுள்ளது. உத்தேச வேலைத்திட் டத்தைநடைமுறைப்படுத்துவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப் பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

# நீர்கொழும்பில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜூலை 4

நீர்கொழும்பு, துங்கல்பிட்டி, மொரவல பகுதியில் துப் பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத்தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள் ளார். (ச-இ)

# மேர்வினுக்கு பிணை

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூன்று பேரை தலா 25 மில்லியன் ரூபா சொத்துப் பிணையிலும் இரண்டு இலட்சம் ரூபா ரொக் கப் பிணையிலும் விடுவிக்க கம் பஹா மேல் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது. கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.கே.டி. விஜேகோன் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளார். கிரிபத்கொடையில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்துக்கு போலி ஆவணங்களைத் தயாரித்து தனியார் ஒருவருக்கு விற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பி டத்தக்கது. (ச-இ)



# ஐந்து ஆண்டுகளில் 49 பேர் தடுப்புக்காவலில் மரணம்!

கொழும்பு, ஜூலை 4

கடந்த ஐந்து ஆண்டுகளில் தடுப்புக்காவலில் இருந்த 49 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இலங்கை மனித உரிமை கள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த மரணங்களில் 30 மரணங்கள் பொலிஸ் மோதல் களில் நடந்துள்ளன. இது ஒரு தீவிரமான பிரச்சினை. இந்த மரணங்களில் சில தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது நடந்த கடுமையான சித்திரவதைகளுடன் தொடர்பு டையவை. ஒரு சிலரின் தவறான நடத்தை முழு நிறுவனங் களின் நற்பெயரையும் கெடுக்கின்றது.

கைதுகள் உண்மையான தவறு இழைக்கப்பட்டதன் அடிப் படையில் இருக்கவேண்டும். அவை சந்தேகத்தின் அடிப்ப டையில் இருக்கக்கூடாது. குற்றங்கள் தொடர்பாக முறைப் பாடளித்தால் தீங்கு நேரிடும் என்ற பயம், பொதுமக்கள் அத்தகைய தகவல்களைப் பகிர்ந்துகொள்வதைத் தடுக்கிற து-என்றார். (எ-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
சனிக்கிழமை - ஆனி 21
05.07.2025
சுபநேரம் : 02.57- 04.27
ராகுகாலம் :08.57- 10.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக்கேள்விக்கான கோரல்(2025/03)
# மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம்

1. வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்

   **விலைக்கேள்வியாளர்கள் பொது கொன்றாக் சட்டம் 1987 இல 03 ன் பிரகாரம் பதிவினை மேற் கொண்டிருக்க வேண்டும்**
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின் வகுதி 04 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மேலதிக தகைமைத் தேவைகள் SBD 1 ற்கமைவாக (Works specified GROUP B in Table below in Category I and Category II) பெறுகை ஆவணத்தின் வகுதி 05 இலும் (Bidding Data & Contract Data)SBD 3 ற்கமைவாக (Works specified as Group A in Table below) பெறுகை ஆவணத்தின் வகுதி 05 இலும் (Schedule) குறிப்பிடப்பட்டுள்ளன.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் வகை- I ற்கு 2025.07.04ல் இருந்து 2025.07.18 ஆம் திகதி வரையும் மற்றும் **வகை-II ற்கு 2025-07-04 - 2025-07-25** ஆம் திகதி வரையும் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மாகாண ஆணையாளர், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், வடக்கு மாகாணம், இல.572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-222 0824, தொலைநகல் 021-222 0822) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட திகதி வரை சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்இபிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், திணைக்களப்பெறுகைக்குழு, மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், வடக்கு மாகாணம், இல. .572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 2025.07.11 ஆந் திகதியில் நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Category I | Document Issuing/Purchasing Period | | From 2025-07-04 To 2025-07-18 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | At 2.30 P.M on 2025-07-11 | | | | | |
| | Closing and Opening of Bids | | At 10.30 A.M on 2025-07-21 | | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group A | | | | | | | | |
| PSDG/NP/B/IM/VA/2025/01 | Land Preparation CSD Eraperiyakulam | 1.24 | 30 | C9 or above (Buildings) | 2,000.00 | 13,000.00 | 06/10/2025 | 08/09/2025 |
| MRC/NP/B/IM/VA/2025/05 | Urgent Repair works of Rural Siddha Hospital, Eraperiyakulam | 2.14 | 45 | C9 or above (Buildings) | 2,000.00 | 22,000.00 | 06/10/2025 | 08/09/2025 |
| PSDG/NP/B/IM/MU/2025/02 | Construction of Vehicle shed at Mullaitivu | 3.38 | 60 | C9 or above (Buildings) | 2,000.00 | 34,000.00 | 06/10/2025 | 08/09/2025 |
| CBG/NP/B/IM/JA/2025/01 | Improvement of Safety fence Siddha Central Dispensary & Herbal Garden at Navakkiri | 2.54 | 45 | C9 or above (Buildings) | 2,000.00 | 26,000.00 | 06/10/2025 | 08/09/2025 |
| Group B | | | | | | | | |
| PSDG/NP/B/IM/MU/02 | Construction of Doctor's Quarters at Divisional Siddha Hospital at Puthukkudiyirppu | 17.33 | 150 | C7 or above (Buildings) | 6,000.00 | 174,000.00 | 03/11/2025 | 06/10/2025 |
| PSDG/NP/B/IM/KN/2025/01 | Construction of Doctor's Quarters at Divisional Siddha Hospital at Kalmadunagar | 17.00 | 150 | C7 or above (Buildings) | 6,000.00 | 170,000.00 | 03/11/2025 | 06/10/2025 |
| Category II | Document Issuing/Purchasing Period | | From 2025-07-04 To 2025-07-25 | | | | | |
| | Pre-Bid Conference | | At 2.30 P.M on 2025-07-11 | | | | | |
| | Closing and Opening of Bids | | At 10.30 A.M on 2025-07-28 | | | | | |
| PSDG/NP/B/IM/JA/05 | Construction of stores( Four Storeyed Building with Elevator) for Provincial Department of Indigenous Medicine at Atchuvely | 76.54 | 240 | C5 or above (Buildings) | 19,000.00 | 766,000.00 | 24/11/2025 | 27/10/2025 |

**தவிசாளர்**
**திணைக்களப் பெறுகைக்குழு**
**மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் வடமாகாணம்**
**இல. 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**




# வட்டக்கச்சியில் அறுவடை விழா

கிளிநொச்சி, ஜூலை 4

வடமாகாண விவசாயத்திணைக்களத்தின் நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின்கீழான அறுவடை விழா கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் நேற்று நடைபெற்றது.

நவீன முறையான பரசூட் முறையில் விதைக்கப்பட்ட ஏரி 307என்ற வெள்ளை நெல்லே அறுவடைசெய்யப்பட்டது.

பாடவிதான உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண மேலதிக விவசாயப்பணிப்பாளர் தட்சணாமூர்த்தி யோகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட விவசாயப்பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள் ,விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-113)

# செம்மணிப் புதைகுழிக்கு நீதி மலையகம் கைகோர்க்கும்!

கொழும்பு, ஜூலை 4

செம்மணிப் புதைகுழிக்கு நீதியைப் பெறுவதற்கும் வடக்கு-கிழக்கு மற்றும் இலங்கை வாழ் அனைத்து தமிழர்களின் உரிமைக்காகவும் மலையக இளைஞர் என்றும் கைகோர்ப்பர் என்று ஜனநாயக இளைஞர் காங்கிரஸின் நுவரெலியா மாவட்டத் தவிசாளர் லதுர்ஷான் வெள்ளசாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமீப காலமாக உலகளாவிய ரீதியில் பேசுபொருளாகமாறியுள்ள செம்மணிப் புதைகுழி மூலம் எம் தமிழின மக்களுக்குத் தீர்வுவேண்டுமேதவிர பரிதாபங்கள் இல்லை. போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியோ, தீர்வோ இதுவரை காலமும் கிடைக்கப்படாதநிலையில் செம்மணிப் புதைகுழியானது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பது வேதனையளிக்கிறது- என்றார். (ச-27)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

திருநெல்வேலி கிழக்கிலுள்ள வாலையம்மன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ சந்திர சாந்தரூபக்குருக்கள் தலைமையில் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அனுஷ நட்சத்திரத்தில் இடம்பெறவுள்ளது. கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.55மணியளவில் கிரியா மங்களாரம்பத்துடன் மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் ஆரம்பமானது. இன்று வெள்ளிக்கிழமை காலை 7மணி முதல் நாளை சனிக்கிழமை மாலை 7மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். மாலை 5மணிக்கு மஹா யாகரம்பம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நிகழும். தினமும் காலை நவகலச அபிஷேகமும், மாலை ஸ்ரீ சக்ரநவாவரண பூஜையுடன் திருவீதியுலா உற்சவமும் நடைபெறும். மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கு அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மாநிலமாக இலங்கை மாறும் அபாயம்

## சர்ச்சையைக் கிளப்பும் அபேதிஸ்ஸ தேரர்

**கொழும்பு, ஜூலை 4**

**இந்தியாவின் 29ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றியமைக்கும் பல செயற்பாடுகள் இரகசியமாக முன்னெடுக்கப்படுவதை அறியமுடிகின்றது. அவ்வாறு நடந்தால் ஆசியாவின் இஸ்ரேலாக வடக்கு, கிழக்கு மாகாணம் மாற்றமடையும். அதன்பின்னர் இலங்கைக்குள் எல்லையைப் பாதுகாக்கும் போராட்டம் தலைதூக்கும் என்று தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையில் 21 இராமர் கோயில்கள் நிர்மாணிக்கப்படும் என்று இந்தியா கூறுகின்றது. இந்து பிராமண சூழலில் பௌத்த மதம் பாதுகாக்கப்படாது. அதனால் தான் இந்தியாவில் பௌத்தமதம் அழிந்தது. இந்தநிலைமை இலங்கையில் ஏற்பட அனுமதிக்கமுடியாது. நட்பு நாடு என்று குறிப்பிட்டு இந்தியா ஆரம்பகாலம் முதல் இலங்கைக்குப் பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் எந்தக் கட்சி வந்தாலும் அவர்கள் ஊடாகத் தனது நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்தவே இந்தியா முயற்சிக்கும். அண்மையில்கூட இந்தியாவுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவை இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. இந்தியாவுடன் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு மக்கள் அனுமதியளிக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணிதான் அனுமதியளித்துள்ளது. ஆட்சியாளர்கள் தாம் தற்காலிக உரிமையாளர்கள் என்பதை மனதில் வைத்துச் செயற்படவேண்டும் - என்றார். (எ-இ)



காணிப்பிரச்சினைகள் ஆராய்வு

# வனஉயிரிகள் திணைக்களம் பங்கேற்பின்மையால் கிடப்பில்

கொழும்பு, ஜூலை 4

காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட மக்கள்பிரச்சினைகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டபோது வனஜீவராசிகளால் திணைக்களப் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் பங்கேற்காமையால் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை.

குறித்த கூட்டத்தில் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் தவிசாளர், உபதவிசாளர், அதிகாரிகள், பொலிஸார் இராணுவத்தினர் மற்றும் பல அமைப்புகள் பங்கேற்றன.

இதன்போது வனஜீவராசிகள் திணைக்களத்தினால் எல்லைப்படுத்தப்பட்ட 200 ஏக்கர் வயற்காணிகளை விடுவித்தல் மற்றும் மத்திய வகுப்புத்திட்டக் காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு ஆவணங்கள் வழங்கப்படுவது ஆகியவை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வனஜீவராசிகள் திணைக்களத்திடம் கேள்விகள் தொடுக்கப்பட்டபோது திணைக்களம் சார்பில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் வருகைதாராத காரணத்தால் குறித்த விடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை. (ச-113)

# கடல் வளம் சூறையாடல் நிறுத்தப்படவேண்டும்

*அன்ரனி சங்கர் தெரிவிப்பு*

மன்னார், ஜூலை 4

இலங்கை வடபகுதி மீனவர்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். எமது மீனவர்களின் வயிற்றில் அடிக்கின்ற செயற்பாடுகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்டத் தலைவர் அன்ரனி சங்கர் தெரிவித்துள்ளார்.

மன்னார் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடபிராந்திய மீனவர்களின் மிகப்பெரிய பிரச்சினையாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை காணப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் சட்டவிரோதமான தொழிலையே மேற்கொள்கின்றனர். இதனை முற்றுமுழுதாக நிறுத்தவேண்டும். எமது மீனவர்களின் பிரச்சினை வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்களின் படகுகள் வருகைதராமல் பாதுகாக்கவேண்டியது ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சரினுடைய கடமை என்று நாங்கள் கருதுகிறோம் - என்றார். (ச-56)

# தே.ம.சக்திக்குள் குழப்பம் என்பது தோற்றவர்களின் கட்டுக்கதையே

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 4

அரசாங்கத்துக்குள் எவ்வித குழப்பமும் இல்லை. 2030 ஜனாதிபதித் தேர்தலையும் தேசிய மக்கள் சக்தியாகவே எதிர்கொள்வோம் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜே.வி.பி.யின் முயற்சியால்தான் தேசிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்திக்குள் எவ்வித முரண்பாடும் கிடையாது. அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்த தரப்புகளே இப்படியான கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றன. அவர்களின் பகல் கனவு ஒருபோதும் நனவாகாது. தேசிய மக்கள் சக்தி மேலும் வலுப்படுத்தப்படும். 2030ஆம் ஆண்டுத் தேர்தலைக்கூட தேசிய மக்கள் சக்தியாகவே எதிர்கொள்வோம்-என்றார். (எ-44)

# அர்ஜுனவைக் கைதுசெய்யும் முயற்சி தொடர்ந்து நடக்கும்

*நீதி அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 4

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு அழைத்துவருவதற்காக அரசாங்கம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டுவருவது தொடர்பில் 2022ஆம் ஆண்டு சிங்கப்பூர் அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கையைத் தொடருமாறு சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளோம். மீண்டும் சிங்கப்பூர் அரசாங்கத்துடன் கோரிக்கை முன்வைப்பதற்கு குழுவொன்றை நியமித்துள்ளனர். இதற்குப் பல வழிகள் உண்டு. கோரிக்கை நிராகரிக்கப்படாதவாறு மீண்டும் கோரிக்கையை முன்வைக்கவேண்டும். அந்த நடவடிக்கையை சட்டமா அதிபர் மேற்கொண்டுள்ளார். எமது கோரிக்கையைச் சரியாக வைப்போம், இறுதிமுடிவெடுக்கும் அதிகாரம் சிங்கப்பூர் அரசாங்கத்திடமே உள்ளது-என்றார். (எ-75)

# இலங்கைக்கான விநியோகசேவை 'அலி எக்ஸ்பிரஸ்' இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 4

உலகின் முன்னணி ஒன்லைன் சந்தைகளில் ஒன்றான அலி எக்ஸ்பிரஸ், இலங்கைக்கு பல வகையான பொருள்களை விநியோகிக்கும் சேவையை நிறுத்திவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தென்னிலங்கை ஊடகம் ஒன்று இந்தத் தகவலை செய்தியாக வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், அந்நிறுவனத்திடம் தொடர்புகொண்டு தகவல் கோரியபோது, இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள புதிய வரிகள் தொடர்பில் தெளிவு இல்லாததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவன வாடிக்கையாளர் சேவைத்துறை தெரிவித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)



வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலய ஆடிவேல் விழாவின் கொடியேற்ற உற்சவத்தை முன்னிட்டுத் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக்கந்தன் ஆலயத்தைநோக்கி வேல் அனுப்பும் பயணப்பூசை கடந்த வியாழக்கிழமை மாலை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

## பணி வெற்றிட அறிவிப்பு: உடற்கோப்பு திருத்துனர் (Tinker)

HALO Trust உலகின் மிகப்பெரிய மற்றும் நீண்டகாலமாக இயங்கும் சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி நடவடிக்கை நிறுவனமாகும். 30 ஆண்டுகளுக்கும் மேலாக. HALO அச்சுறுத்தும் வெடிபொருட்களை அகற்றுவதன் மூலமும். வருங்கால தலைமுறைகளுக்கு நிலத்தை பாதுகாப்பானதாக மாற்றுவதன் மூலமும் உயிர்களைக் காப்பாற்றி. போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீட்டெடுக்க உதவுகிறது.

இலங்கையில். HALO 2002 முதல் செயல்பட்டு வருகிறது. வடக்கு மாகாணம் முழுவதும் 1.000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பணியமர்த்தியுள்ளது. யாழ்ப்பாணம். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இதுவரை. HALO 300.000 க்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் உட்பட 1 மில்லியனுக்கும் அதிகமான வெடிபொருட்களை பாதுகாப்பாக அழித்துள்ளது.

### Tinker இன் முக்கிய பொறுப்புகள்

- வாகன பழுதுபார்ப்பு மற்றும் மாற்றங்கள்: வாகனங்கள் உகந்த நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்காக பழுதுபார்த்தல். மாற்றியமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவை இதில் அடங்கும்.
- சிறப்புப் பணிகள்: வெல்டிங். பேனல் பீட்டிங். பெயிண்ட் மற்றும் பாதுகாப்பு பூச்சுகளைப் பயன்படுத்துதல் மற்றும் வாகனக் கூறுகளின் சரியான பொருத்தம் மற்றும் பூச்சு ஆகியவற்றை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்
- மேற்பரப்பு தயாரிப்பு: பூச்சுகள் மற்றும் பழுதுபார்ப்புகளின் சீரான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக மேற்பரப்பு தயாரிப்பு பணிகளைக் கையாளுகிறது.
- கருவி மற்றும் உபகரணங்களின் பயன்பாடு: வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும் மாற்றுவதற்கும் தேவையான பல்வேறு கருவிகள் மற்றும் உபகரணங்களை இயக்குகிறது.
- பழுதைக் கண்டறிதல் மற்றும் சரிசெய்தல்: வாகன உடல் வேலைப்பாடு மற்றும் கூறுகள் தொடர்பான சிக்கல்களைக் கண்டறிந்து தீர்ப்பதில் ஈடுபடுகிறது.
- தர உறுதி: அனைத்து வேலைகளும் பாதுகாப்புத் தரங்களைப் பூர்த்தி செய்வதை உறுதிசெய்கிறது மற்றும் வாகனங்களின் கட்டமைப்பு ஒருமைப்பாடு மற்றும் தோற்றத்தைப் பராமரிக்கிறது. தயவுசெய்து செய்தியை முறையாக வழங்கவும்.

### யார் விண்ணப்பிக்கலாம்?

- குறைந்தது ஐந்து 3 - 5 வருடங்கள் இத்தொழிலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
- கடினவேலை செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் நல்ல தேகாரோக்கியம்
- உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
  கிளிநொச்சியை வசிப்பிடமாக கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
- செல்லுபடியான வாகன ஓட்டுனர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.


அனைத்து விண்ணப்பங்களும் **ஜுலை 14, 2025 திங்கட்கிழமைக்குள்** கீழே உள்ள முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**மனிதவள முகாமையாளர்**
**The HALO Trust**
**450 திருநகர் மேற்கு, கிளிநொச்சி**
**ht@halosrilanka.org**

(CS 45416) E

# மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 31 | | 03 |
| 05 | | 07 |
| 1954 | | 2025 |



## அருளானந்தம் அன்ரன் வெஸ்லி ரவிந்திரா

**(Former Employer Post office jaffna )**
**Former Employer saturday review (Paper publicity LTD )**
**(All boy ST patrick's College jaffna)**


யாழ்ப்பாணம் 60/1A, salomans Lane பழைய பூங்கா வீதி சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும், யாழ் ஏழாலை வடக்கு மதவடியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் அன்ரன் வெஸ்லி ரவிந்திரா அவர்கள் நேற்று 03.07.2025 வியாழக்கிழமை காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம்-நவமணி தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான அருளப்பு - ஞானம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், மேரி லூட்ஸ் (தவராணி) அவர்களின் அன்புக் கணவரும் . கலிஸ்ரா, வானுசன் ,ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினி (ஜேர்மனி) . எட்வேட் (திருச்சி), லயன் மனோகரன் . சாந்தி (கனடா) . காலஞ்சென்ற பேனாட், மற்றும் மாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற டெய்சி பற்றிமா , மற்றும ஸ்திபன் (லண்டன்), அன்டனிதாஸ் (கனடா), அருள்தாஸ் (UK), மேரி யசிந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.07.2025) வெள்ளிக்கிழமை இசிதோர் ஆலயத்தில் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இசிதோர் . சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் . உறவினர்கள் . நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**தகவல்**
**குடும்பத்தினர்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.03.1942 | 04.06.2025 |

**குடும்பத்தலைவனாய் எம் குடும்பத்தின் குல விருட்சமாய் வந்தோரை வரவேற்கும் எம் இனத்தின் பண்பாட்டை எப்போதும் பின்பற்றும் எல்லோர்க்கும் விருந்தளித்து மகிழ்ந்திடும் எம் தந்தை இன்று எமைப் பிரிந்து இறையடியே தஞ்சமானீர். உம் பேர் வாழ எம்மில் வளர்த்த பண்பு நிலைக்க இறையடியில் அமைதியுற்ற எம் குடும்பத் தலைவனின் பாதங்களில் பூக்களால் அர்ச்சிக்கிறோம்.**

**கடந்த 04.06.2025 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்**

## சுப்பிரமணியம் புலேந்திரலிங்கம் (காட்டர்)

**(ஓய்வுநிலை கிளை முகாமையாளர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - இயக்குனர் சபை உறுப்பினர்)**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வருகை தந்தும் தொலைபேசி மூலமாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் அனுதாபச் செய்திகளை பகிர்ந்தும் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும், பதாதைகள் ஊடாகவும் இரங்கல் செய்தி பிரசுரித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலித்தோருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (04.07.2025) வெள்ளிக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மா சாந்தி பிரார்த்தனை நிகழ்விலும் கலந்துகொண்டு அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


**முதலாம் மைல் வீதி**
**மடத்தடி**
**சாவகச்சேரி**

(CS 45417) E

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
09 . 09 . 1935

மறைவு
03 . 07 . 2025

## பிரம்ம ஸ்ரீ சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள்

இணுவிலை பூர்வீகமாகவும், நாவற்குழியை பிறப்பிடமாகவும், குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயம் மற்றும் இணுவில் செகராசசேகர பிள்ளையார் ஆலய முன்னாள் பிரதம குருக்களாக விளங்கிய பிரம்ம ஸ்ரீ சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள் (கணபதி துரந்தரர், சிவாகம திலகம் சைவசித்தாந்த இரத்தினம்) அவர்கள் நேற்று (03.07.2025) வியாழக்கிழமை காலை சிவனடி எய்தினார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை மறுதினம் (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இணுவில் கந்தசுவாமி கோவில்,**
**077 132 7704**
**076 834 8882**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**44 7500 110675,**
**44 7985 547827**
**+1 (416) 876 2540**
**45224 35945**

# நன்றி நவிலல்



தோற்றம்
17 . 04 . 1936

மறைவு
08 . 06 . 2025

## கிறேஸ் பாக்கியரத்தினம் வெற்றிவேலு

"நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"
2தீமோத்தேயு 4:7

எமது குடும்பத் தலைவி அமரர் கிறேஸ் பாக்கியரத்தினம் வெற்றிவேலு அவர்கள் நோயுற்ற வேளை சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார் மற்றும் ஏனைய ஊழியர்களிற்கும், பராமரிப்புக்கும் உதவியவர்களுக்கும் தேவைப்பட்ட வேளை தேவைகளை வழங்கியவர்களிற்கும் மற்றும் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், வெளியூர், உள்ளூரிலிருந்தும், தொலைபேசி, முகநூல், வட்சப் ஊடாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் அன்னாரது இறுதி ஆராதனையில் கலந்து கொண்ட கிறிஸ்தவ மதகுருமார்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் ஏனைய அனைத்து ஒத்துழைப்புக்களையும், கண்ணீர் அஞ்சலி மற்றும் மலர்வளையம், மலர்மாலைகள், பதாதைகள் வழங்கியோருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் பங்கெடுத்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.


குறிப்பு: (05.07.2025) சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**இரத்தினவாசம்,**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**074 331 0536**
**077 425 7960**

# மரண அறிவித்தல்

## திரு வேலுப்பிள்ளை மகாதேவன்



தோற்றம் 05.05.1929
மறைவு 03.07.2025

சீரணி நாகம்மாள் கோயிலடி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு வேலுப்பிள்ளை மகாதேவன் அவர்கள் நேற்று (03.07.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா-நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், மதனகுமார் (லண்டன்), யதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரவதனாவின் அன்பு மாமனாரும் ஆதித்தன் (சிங்கப்பூர்), அபிராஜ் (ஊவாவெல்லச பல்கலைக்கழகம்-பதுளை), அஸ்வினா (மாணவி-யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், கணேசமூர்த்தி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2025) வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி மேற்கு கொத்தத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 08 . 1944

மறைவு 03 . 07 . 2025



## சங்கரப்பிள்ளை சந்திரபாலன் (தியாகு)

(முன்னாள் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர்)

முள்ளானை இளவாலையை பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு முதலியார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சந்திரபாலன் (தியாகு) அவர்கள் நேற்று (03.07.2025) அன்று இறைவனடி அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-தையல்முத்து தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி -இராசம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்பு கணவரும், கலைவாணி, கலைஞன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரன், பிரியதர்சினி ஆகியோரின் மாமனாரும், சஞ்சுதன், கேசவி, தக்ஸ்வி ஆகியோரின் அன்புப் பேரனும் சிவராசா, காலஞ்சென்ற நடராசா யெகதீஸ்வரி, யெயராசிங்கம், இராசேஸ்வரி, காலஞ்சென்ற கதிர்காமநாதன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு செட்டிச்சோலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அளவெட்டி வடக்கு,
முதலியார் கோவிலடி,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 274 1622 (சுதன்)

# மருந்துப்பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

மூளாய் கூட்டுறவு மருத்துவமனையால் பராமரிக்கப்பட்டும் வயோதிப நோயாளர்களின் பயன்பாட்டுக்காக ஒரு தொகுதி மருந்துப்பொருள்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் 2004ஆம் வருட உயர்தர மாணவர்களால் இன்று அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 2004ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதி கல்லூரியிலிருந்து விடுகை பெற்ற மாணவர்களின் மீள் ஒன்றுகூடல் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளன. இந்த ஒன்றுகூடலின் ஒருபகுதியாகவே மேற்படி மருந்துப் பொருள்கள் கையளிக்கப்படவுள்ளன.

(ம-26)



# உணவுப் பாதுகாப்பு யாழில் செயலமர்வு

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது குறித்து யாழ். மாவட்டப் பிரதேச ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

குறித்த செயலமர்வு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியன இணைந்து ஐரோப்பிய ஒன்றியக்குழுவின் நிதியுதவியுடன் முன்னெடுத்தன.

செயலமர்வில் சுகாதார அமைச்சின் பிரதம உணவு மற்றும் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரி சுதர்சன், வடக்கு மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கருத்துரைகளை வழங்கினர். இதில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதேச ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.

(ச-20)

JOB FAIR DEWMAS
வேலைவாய்ப்பு முகாம் 2025
150 + Jobs 30 + Companies
இடம் :- யாழ் இந்துக் கல்லூரி (குமாரசாமி மண்டபம்)
காலம் :- 05.07.2025 (சனிக்கிழமை)
நேரம் :- காலை 8:30 தொடக்கம் மாலை 5 மணி வரை
0740833368 / 0777733368
0760984532
மேலதிக வேலைவாய்ப்பு விபரங்களை அறிந்து கொள்ள dewmasweb.com ஐ பார்வையிடவும்



# 900 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது

வென்னப்புவப் பகுதியில் 900 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் மூவர் கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதான சந்தேகநபர்களிடம் இருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள், 4 மகசின்கள் மற்றும் 40 ரவைகளையும் கைப்பற்றியுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

(ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 10 . 1961

மறைவு 03 . 07 . 2025



## கணபதிப்பிள்ளை தேவராசா

காரைநகர் செம்பாட்டை பிறப்பிடமாகவும், குளப்பிட்டி ஒழுங்கை கொக்குவில் கிழக்கு கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தேவராசா அவர்கள் நேற்று (03.07.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (P.K) - பூமணி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா - நல்லதங்கம் தம்பதியின் அன்பு மருமகனும், விக்கினேஸ்வரியின் பாசமிகு கணவரும், டிசாந்தன் (பிரான்ஸ்), சுரேஸ் (பிரான்ஸ்), நிர்மலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலக்சியின் (பிரான்ஸ் -சிந்து) பாசமிகு மாமனாரும், வேலாயுதம், மகேஸ்வரி, ஆனந்தராசா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும், மகேஸ்வரி (பிரான்ஸ்), புவனேஸ்வரி, சிவகுமார், செகதீசன் (பிரான்ஸ்), வசந்தமலர், குணராசா, சந்திரபாலன் காலஞ்சென்ற றஞ்சனாதேவி, யோகராசா (பிரான்ஸ்), தங்கமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 02.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 300 4697

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 10 . 1949

மறைவு 03 . 07 . 2025



## முருகையா குகநேசன்

மல்லாகம் சந்தியினை பிறப்பிடமாகவும் ஐயனார் கோவிலடி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முருகையா குகநேசன் அவர்கள் நேற்று வியாழக்கிழமை (03.07.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா - பவானியம்மா தம்பதியின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - புவனேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும், சற்குணேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கார்த்திகன், மதுசனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிந்துஜா அவர்களின் அன்பு மாமனாரும், வனிதா அவர்களின் அன்புச் சகோதரரும், பத்மநாதன், சிவகுணபாலன், வசந்தகுணபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2025) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 1829
075 964 0644

# சிறுவர் மகிழ்களமும் நாடக இரவும்

யாழ்., ஜூலை 4

செயற்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் படைப்பாற்றலுக்கும், ஆளுமை விருத்திக்குமான களமான சிறுவர் மகிழ்களம் மற்றும் சிறுவர் நாடக இரவு நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5மணி முதல் இரவு 8மணி வரை நல்லூர் முதலாவது குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வரைதல், ஆடல், பாடல், விளையாட்டு, நாடகம் போன்ற பல் வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ச-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களின்...

முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, சிறுவர்களின் என்புத்தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் இரு என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டன. மேலும் நான்கு மண்டையோடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இதுவரை 40 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 34 மனிதச் சிதிலங்கள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மீட்கப்பட்ட...

ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் முதற்கட்ட அகழ்வுப் பணிகள் மூன்று நாள்கள் இடம்பெற்ற வேளையில் மழை காரணமாக நிறுத்தப்பட்டு பின் ஆறுநாள்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றிருந்தன. அதன் பின் இரண்டாம்கட்ட அகழ்வுப்பணி தொடர்ச்சியாக 8 நாள்களாக இடம்பெற்று வருகின்றது. மொத்தமாக 17 நாள்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 34 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலின் கீழ் சட்டமருத்துவ அதிகாரி பிரணவனிடம் கையளிக்கப்பட்டுள்ளன. கையளிக்கப்பட்ட என்புத் தொகுதிகள் யாழ். பல்கலைக்கழக மருத்துபீட சட்ட மருத்துவத்துறையில் உள்ள என்பு ஆய்வு கூடத்தில் பாதுகாப்பாகச் சேமிக்கப்பட்டுள்ளன.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட பாடசாலை புத்தகப்பை, பொம்மை, காலணி, சிறு வளையல் போன்ற பொருள்கள் நீதிமன்ற கட்டுக்காவலில் சான்றுப் பொருள்களாக பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.

தற்போது அகழ்வுப் பணிகள் மாத்திரமே இடம்பெற்று வருகின்றன. எந்தப் பொருள்களையும் ஆய்வுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. முழுமையாக அகழ்வுப்பணிகள் நிறைவு பெற்றதன் பிற்பாடே மனித என்புத் தொகுதிகள் சட்ட மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினரால் ஆய்வுசெய்யப்படும். அதன்பின்னர் இறப்புக்கான காரணம், மீட்கப்பட்ட குறித்த என்புத் தொகுதிகள் ஆணா, பெண்ணா மற்றும் வயது என்பன அறிவிக்கப்படும். மேலும் அகழ்வுகள் முடிவுற்றபின் கிடைக்கப்பெற்ற பிற சான்றுப்பொருள்களின் கால எல்லையினை தொல்லியற்துறை பேராசிரியர் ராஜ் சோமதேவா வெளிப்படுத்துவார் - என்றார். (அ-ம-26)

## வேழமாலிகிதனை...

மாகாண ஆளுநரை சந்தித்து உரையாடியதாக அறியக்கிடைத்தது. அந்த மூவரில் ஒருவர் அண்மையில் கட்சியில் இருந்து விலக்கப்பட்ட ஜீவராசா என்றும் அறியக்கிடைத்தது. இவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சிக்கு எதிராக சுயேச்சையாகப் போட்டியிட்டவர். கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் எமக்கெதிராக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர் என்பதும் நீங்கள் நன்கு அறிந்த விடயங்கள். வெளிப்படையாகவே கட்சிக்கு எதிராக செயற்படும் ஒருவர் உத்தியோகபூர்வ சந்திப்பு ஒன்றில் உங்களுடன் சேர்ந்து கலந்து கொள்வதும் அது பகிரங்க செய்தியாக வெளிவருவதும் கட்சியின் நலனை வெகுவாகப் பாதிக்கும் என்பது தாங்கள் அறிந்திருக்க வேண்டிய தொன்று.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுக்கு போட்டியிட சந்தர்ப்பம் வழங்க முன்னர், கடந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக செயற்பட்டமைக்கு தாங்கள் மன்னிப்பு கோரியதோடு எதிர்காலத்தில் இப்படியான குற்றத்தை செய்தால் எவ்வித விசாரணையுமின்றி கட்சியில் இருந்தும் கட்சி சார்பில் வகிக்கும் பதவியிலிருந்தும் உடனடியாக நீக்கப்படுவதற்கு உங்களது ஒப்புதலை வழங்கியுள்ளீர்கள்.

ஆகவே ஜீவராசா போன்ற ஒருவரை ஆளுநரை சந்திக்க சென்ற உத்தியோகபூர்வ குழுவில் சேர்த்துக் கொண்ட குற்றத்துக்காக நீங்கள் ஏன் கட்சியில் இருந்து நீக்கப்படக் கூடாது? என்பதற்கு எதிர்வரும் ஒரு வாரத்துக்குள் எழுத்துமூலம் தெரியப்படுத்த வேண்டும். இல்லையெனில் அல்லது திருப்திகரமான பதில் அளிக்காவிட்டால் நீங்கள் கட்சியில் இருந்து உடனடியாக நீக்கப்படுவீர்கள் என்பதை இத்தால் தங்களுக்கு அறியத் தருகின்றேன் - என்றுள்ளது. (அ-ம-26-100)

## மூத்த...

றின் அலுவலகச் செய்தியாளராகவும், நிகழ்ச்சிகள் பலவற்றுக்கு குரல் வழங்குபவராகவும் செயற்பட்டார்.

2010ஆம் ஆண்டுமுதல் உதயன் உள்ளிட்ட பல ஊடகங்களில் கிளிநொச்சி பிராந்திய செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளார். நீண்டகாலமாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

**அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அக்கராயன்குளம் அணைக்கட்டு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் என குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.** (அ-ம-66-113)

## போதைக்கு...

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருளுக்கு அடிமையான ஐந்துபேர் புனர்வாழ்வகத்துக்கு அனுப்பப்பட்டனர்.

வல்வெட்டித்துறை ... தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய ஐவரே நேற்றுமுன்தினம் இவ்வாறு புனர்வாழ்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## அகழ்வு...

நீதிமன்றத்தின் கவனத்துக்கு ஏற்கனவே கொண்டு சென்றிருந்தார். அவரால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் நீதிமன்ற அனுமதியுடன் நேற்றுமுன்தினம் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையிலேயே, நேற்றைய தினம்புதியபகுதியில்இருந்துஆடையை ஒத்த சான்றுப்பொருளொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான அகழ்வுப் பணிகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-26)

## காரைநகரில்...

பிள்ளை பவன்ராஜ் (வயது - 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார்சைக்கிளும், உழவியந்திரமும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார்சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞர் படுகாயமடைந்திருந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். (அ-ம-26)

## மீன்பிடிக்கச்...

உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கிளிநொச்சி - மலையாளபுரம் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## நெஞ்சுவலி...

நெஞ்சுவலி ஏற்பட்டதைத் தொடர்ந்து, அந்த இளைஞர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## 25,000...

மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் வாழ்கின்ற இடம்பெயர்ந்த மக்களுக்கும் காணியற்ற மக்களுக்கும் புதிதாக திருமணம் முடித்து காணிகள் அற்ற குடும்பங்களுக்கும் தீர்வொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அந்தவகையில் கடந்த 2012ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் 'கூகுள்' வரைபடத்தின் மூலம் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட அனைத்துக் காணிகளையும் விடுவிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக இந்த மாவட்டத்தில் அண்ணளவாக 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திலும் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 52ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளது. அவற்றில் கணிசமானவற்றை தேசியமக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் விடுவிக்கவுள்ளது. அந்த காணிகளை அதன் உரிமையாளர்களுக்கும் காணிகள் அற்ற மக்களுக்கும் வழங்குவதற்கான துரித நடவடிக்கையை நாம் மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் வவுனியாவில் 849 குளங்கள் உள்ளன. அதில் 221 குளங்கள் வனவளத் திணைக்களத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளன. இவற்றில் தற்போது 44 குளங்களை உடனடியாக விடுவித்து அவற்றை புனர்நிர்மானம் செய்து மக்களிடம் ஒப்படைக்கவுள்ளோம். அத்துடன் காடுமண்டி காணப்படுகின்ற ஏனைய 149 குளங்களை மீட்டு அவற்றை சுத்தப்படுத்தி மக்கள் பாவனைக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கைவிரைவாகமுன்னெடுக்கப்படும். இந்த வருடத்துக்குள் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

வவுனியா மாவட்டத்தில் ஆறு பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. அவற்றை புனரமைப்பதற்காக 780 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. அந்த நிதியை அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக உலக வங்கி ஒரு பில்லியன் டொலர் நிதியை வழங்கவுள்ளது. இதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம் - என்றார். (அ-ம-110)

## பயங்கரவாதத்...

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

1979ஆம் ஆண்டில் தற்காலிக ஏற்பாட்டுச் சட்டமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும், அது இன்றளவிலும் நீடிக்கின்றது. குறித்த சட்டத்தை நீக்குவது தொடர்பில் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழு பல்வேறு யோசனைகள் தொடர்பில் தற்போது ஆராய்ந்து வருகின்றது. அனேகமாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக ரத்துச் செய்யப்படும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு நாங்கள் தீர்மானிக்கவில்லை. மாறாக அதை முற்றாக நீக்கவே திட்டமிட்டுள்ளோம். தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக, கருத்துச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம், அடையாளம் என்பவற்றைப் பாதுகாக்கும் வகையிலும் சர்வதேச நியமனங்களுக்கு அமையவும், மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும் புதிய சட்டம் இயற்றப்படும். பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான அனைத்து விமர்சனங்களும் நிவர்த்தி செய்யப்படுவதுடன், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் புதிய சட்டம் அமையும் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிளாஸ்ரிக் பொருள்கள் ஆராய்வதற்குக் குழு

கொழும்பு, ஜூலை 4

ஆரோக்கியத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக சந்தையில் காணப்படும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருள்கள் குறித்த ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களில் இதுகுறித்து கடுமையான முடிவுகளை எடுக்கத் தீர்மானித்துள்ளோம். அனைத்துத் தரப்பினரும் அந்தக் குழுவிடம் வந்து தங்கள் சமர்ப்பணங்களை முன்வைக்கலாம். இரண்டு மாதங்களில் அறிக்கை வெளிவந்தபின் சிறந்த முடிவுகளை எடுப்போம் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். (ச-இ)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், யா/கெற்பெலி அ.த.க.பாடசாலை, யா/கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை, யா/மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம், யா/சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு IIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வகுப்பு IIIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் பொருத்தமான பாடசாலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் வலயக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி ஹென்ஸ்மன் வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அதிபர் பதவிக்கான விண்ணப்பம் 2025 எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல்வேண்டும். வகை II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு IIIஐ உடையவராக இருத்தல்வேண்டும். அதிபர் வகுப்பு IIஐச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு IIIஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

வகை III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு IIIஐ உடையவராக இருத்தல் வேண்டும். மாகாணக் கல்வியமைச்சின் அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல் சுற்றுநிருப இல2023/03, 2023/03Aஇற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும். வலய நேர்முகத்தேர்வுச்சபையின் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு சேவைநிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவுசெய்தல் தொடர்பாக வடமாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும். (ச-41)

**வேலைக்கு பெண்பிள்ளைகள் தேவை**

நல்லூர் கந்தர்மடம் பகுதியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு கணக்கு பதிதல் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. A/L மற்றும் கணக்கு பதிதல் தொடர்பான அனுபவம் மிகவும் அவசியம்.

தொடர்பு:- 077 993 7999

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

# வடக்கு மக்களின் நம்பிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும்!

## நீதியமைச்சர் தெரிவிப்பு

வடக்கு மக்கள் நீதியை எதிர்பார்க்கின்றனர். அதன் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கினர். அம்மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும் என்று நீதியமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்குரிய முயற்சிகள் தொடரும். இந்த விடயத்தில் கடந்தகால அரசுகளைவிட எமக்கே கூடுதல் பொறுப்பு உள்ளது. கடந்த வரவு - செலவுத் திட்டத்திலும் வடக்குக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வித பாகுபாடும் காட்டப்படவில்லை. காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களுக்குத் தீர்வு காணப்படவேண்டும். அதற்குரிய நடவடிக்கையையே நாம் முன்னெடுத்து வருகின்றோம்- என்றார். (ச-44)





'ஹோப் போ சில்றன்' அமைப்பின் ஏற்பாட்டில், சிறுவர்களுக்கான உரிமைகள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்வொன்று மருதனாமடத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சட்டத்தரணி வேணுஜா நவரட்ணராஜா, கோப்பாய் பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவினர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 . 12 . 2006 | 02 . 07 . 2025 |

**சுரேஸ்குமார் திஷாலன்**

மடத்தடி கந்தரோடை மேற்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக் கொண்ட சுரேஸ்குமார் திஷாலன் கடந்த (02.07.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
றொசெல்லா பாத்வெயார் உரிமையாளர் (சித்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.